## பணியா, பணிவா?

வாசிக்க: மத்தேயு 3:1-17

***"உங்கள் கீழ்ப்படிதல் முழுமையாகும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்கும் தக்க தண்டனை கொடுக்க (அப்போஸ்தலராகிய) நாங்கள் தயாராயிருக்கிறோம்" (2 கொரி 10:6)***

"கர்த்தரது சகல கற்பனைகள் மற்றும் நியமங்களின்படி குற்றமற்றவர்களாய் நடந்து" வந்த தனது பெற்றோரிடமிருந்து கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டான் திருமுழுக்கினன் யோவான் (லூக் 1:6). அதின் பிரதிபலிப்பாக அவனது ஊழியம் "கீழ்ப்படியாதவர்களைத்" திருப்புவதாயிருந்தது (வச 17). கடவுளது நீதியை நிறை வேற்றத் தடைசெய்யக்கூடாது என்ற ஒரே காரணத்தினால்தான் அவன் இயேசு வுக்குத் திருமுழுக்கு கொடுக்க ஒத்துக்கொண்டான்.

இயேசுவும் முப்பது வயதில் தமது ஊழியத்தைத் தொடங்கும்வரை, தமது பூவுலகத் தந்தைக்கு முன்பாகக் கீழ்ப்படிதலுடன் நடக்கத் தம்மைப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். தமது பரலோகத் தந்தைக்குக் கீழ்ப்படியவேண்டுமென்ற ஒரே நோக்கமின்றி இயேசு திருமுழுக்கு பெற எவ்விதத் தேவையுமில்லை. அவரது கீழ்ப்படிதலின் ஆவியை அங்கீகரிக்கும் வண்ணம் தந்தையானவர், "என் அன் பார்ந்த மைந்தர் இவரே; இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்றார் (மத் 3:17).

நற்செய்திப்பணி என்றாலே "விசுவாசத்திற்குக் கீழ்ப்படிய" மக்களைக் கூவியழைப்பதே (ரோ 16:25,26). கீழ்ப்படிதலற்ற எவரும் நற்செய்தி அறிவிக்க உரிமையற்றவர். அவர்களால் புறவினத்தார் நடுவில் கடவுளின் பெயர் அவ மதிப்புதான் பெறும் (ரோ 2:23,24). சிந்திக்கத் தெரிந்தோரிடம் "நீங்கள் ஏன் கிறிஸ்தவராகக் கூடாது?" என்று கேட்டால், "ஓர் உண்மைக் கிறிஸ்தவனை என்று சந்திப்பேனோ அன்று நான் கிறிஸ்தவனாவேன்" எனக் காந்தியடிகள் சொன்ன பதிலையே திருப்பிச் சொல்லுகின்றனர்.

தமக்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்து நடப்போர் மூலமாகவே பரிசுத்த ஆவியானவர் தடையின்றிச் செயல்படுவார் (அப் 5:32). அவர் புறா போன்று மென்மையானவரானதால் இறைச்சித்தத்திற்கு நாம் கீழ்ப்படியாதிருக்கையில் உடனே சீறியெழாமல், தொடர்ந்து தமது வரங்களை செயல்படுத்த விட்டுக் கொண்டிருப்பார். கீழ்ப்படியாமையை விட்டுத் திரும்பாமலே ஊழியஞ்செய்து கொண்டிருந்தால் மிகப்பெரும் அதிர்ச்சியான தீர்ப்பு காத்திருக்கிறது: "நான் உங்களை அறியேன், என்னை விட்டு அகன்றுபோங்கள்" என்பதே அது (மத் 7:20-27). இந்த எச்சரிப்பைக் கொடுத்த பின்னர் இயேசு கீழ்ப்படிவோரைப் புத்தி யுள்ளோருக்கும் கீழ்ப்படியாதோரைப் புத்தியற்றோருக்கும் ஒப்பிட்டுள்ளார்.

கடவுளுக்குப் பணிபுரிய வெறும் உற்சாகம் போதாது. ஒரு தொழுநோயாளனைச் சுகப்படுத்தியபின் இயேசு அதை ஒருவருக்கும் சொல்லாதேயென அவனைக் "கண்டிப்பாய்" எச்சரித்தும் அவன் இந்தச் செய்தியை எங்கும் பரப்பினபடியால் இயேசு வெளிப்படையாய் ஊழியம் செய்ய முடியவில்லை (மாற் 1:40-45). கீழ்ப் படியாமை இறைப்பணிக்குப் பெருந்தடை!

*கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவனுக்குச் சாத்தான் கீழ்ப்படியாதிருக்க முடியாது!*